# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 2119/6 - 2019 අප්‍රේල් මස 17 වැනි බදාදා - 2019.04.17

*2119/6 ஆம் இலக்கம் - 2019 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 17 ஆந் திகதி புதன்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி I : தொகுதி (I) - பொது

### *அரசாங்க அறிவித்தல்கள்*

**அரச சேவைகள் ஆணைக்குழு**

இலங்கை விவசாய சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான
திறந்த போட்டிப் பரீட்சை - 2013 (2014)

*2015.11.06 ஆந் திகதிய 1940 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள, 2015.09.18 ஆந் திகதிய 1933 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட "இலங்கை விவசாய சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2014)" தலைப்புடைய 2015.08.21 ஆந் திகதிய 1929 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் உப இலக்கம் 2.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களைக் கீழ்வரும் திருத்தங்களுக்கு அமைவாக நிரப்புவதற்கு திறந்த போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை இவ்வண்ணம் அறிவிக்கின்றேன்.*

1. *உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள SC(FR) 283/2014 ஆம் இலக்கமுடைய வழக்கு தொடர்பிலான தீர்ப்பு வழங்கப்படும் வரையில் அந்த வழக்கு நடவடிக்கைக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் கமத்தொழில் அபிவிருத்தி துறையின் கீழ் திறந்த மட்ட அடிப்படையில் காணப்படுகின்ற வெற்றிடங்களில் 51 ஐ மாத்திரம் நிரப்புவதற்கும்,*

2. *கமத்தொழில் அபிவிருத்தித் துறையின் கீழ் திறந்த மட்ட அடிப்படையில் காணப்படுகின்ற எஞ்சிய வெற்றிடங்கள் 18 ஐ உச்ச நீதிமன்றில் தாக்கல் செய்யப்பட்டுள்ள SC(FR) 283/2014 ஆம் இலக்கமுடைய வழக்கு தொடர்பிலான தீர்ப்பு வழங்கப்பட்ட பிறகு முழுமைப்படுத்துவதற்கும்,*

1A - G 29894 — 20 (2019/04)

*இவ் அதிவிசேட வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பிலான ஏனைய ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் 2015.09.18 ஆந் திகதிய 1933 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் திருத்தப்பட்ட, 2015.08.21 ஆந் திகதிய 1929 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படுமென அறிவிக்கின்றேன்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கே. டீ. எஸ். ருவன்சந்திர,
செயலாளர்,
கமத்தொழில், கிராமிய பொருளாதார விவகாரங்கள்,
கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும்
கடற்றொழில்கள் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு.

இல. 288, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
ராஜகிரிய,
2019, ஏப்பிறல் 12.

05-5/1

---

## அரச சேவைகள் ஆணைக்குழு

### இலங்கை விவசாய சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2014)

2015.11.06 ஆந் திகதிய 1940 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலமாக தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ள, 2015.09.18 ஆந் திகதிய 1933 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தல் மூலம் திருத்தப்பட்ட "இலங்கை விவசாய சேவையின் தரம் III இற்கு ஆட்சேர்ப்புச் செய்வதற்கான திறந்த/வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சை - 2013 (2014)" தலைப்புடைய 2015.08.21 ஆந் திகதிய 1929 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலின் உப இலக்கம் 2.3 இன் கீழ் குறிப்பிடப்பட்டுள்ள பதவி வெற்றிடங்களை நிரப்புவதற்கான வரையறுக்கப்பட்ட போட்டிப் பரீட்சையை நடாத்துவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்படுகின்றது என்பதனை இவ்வண்ணம் அறிவிக்கின்றேன்.

இந்த ஆட்சேர்ப்பு தொடர்பிலான ஏனைய ஏற்பாடுகள் மற்றும் நிபந்தனைகள் 2015.09.18 ஆந் திகதிய 1933 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலில் திருத்தப்பட்ட, 2015.08.21 ஆந் திகதிய 1929 ஆம் இலக்க வர்த்தமானி அறிவித்தலுக்கு அமைவாக நடைமுறைப்படுத்தப்படுமென அறிவிக்கின்றேன்.

அரச சேவை ஆணைக்குழுவின் கட்டளைப்படி,

கே. டீ. எஸ். ருவன்சந்திர,
செயலாளர்,
கமத்தொழில், கிராமிய பொருளாதார விவகாரங்கள்,
கால்நடை வளங்கள் அபிவிருத்தி, நீர்ப்பாசனம் மற்றும்
கடற்றொழில்கள் மற்றும் நீரியல் வளங்கள் அமைச்சு.

இல. 288, ஸ்ரீ ஜயவர்தனபுர மாவத்தை,
ராஜகிரிய,
2019, ஏப்பிறல் 12.

05-5/2

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.